www.Padasalai.Net www.CBSEtips.in

H

# முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2023

Reg.No

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

*நேரம்: 1.30 மணி* *மதிப்பெண்கள்: 50*

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 x 1 = 6

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை ஆ) மணி வகை
   இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியடைதல்
   இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
3. மேற்கிலிருந்து வீசும் காற்று________.
   அ) கொண்டல் ஆ) கோடை இ) வாடை ஈ) தென்றல்
4. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல்நாடு ________
   அ) இந்தியா ஆ) சிங்கப்பூர் இ) மலேசியா ஈ) ஜப்பான்

***பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க:***

நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீரிசெல, நிமிர்ந்த மா.அல் போல

5. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
   அ) பாவியக்கொத்து ஆ) கனிச்சாறு
   இ) முல்லைப்பாட்டு ஈ) காற்றே வா
6. வளைஇ என்பது ________ அளபெடை.
   அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
   இ) இசைநிறை அளபெடை ஈ) ஒற்றளபெடை

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** 4 x 2 = 8
**(வினா எண்:11 கட்டாய வினா)**

7. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
8. வசன கவிதை - குறிப்பு வரைக.
9. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
10. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
    அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண் ஆ) எறும்புந் தன் கையாவ் எண்சாண்
11. விடல்... என முடியும் குறட்பாவை எழுதுக

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 3 x 2 = 6
**(வினா எண்:14. கட்டாய -வினா)**

12. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
13. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்: ஓர் இடத்தில் அமர்வேன்: மேலும் கீழும் பார்ப்பேன்: சுற்றுமுற்றும் பார்ப்பேன்: மனம் அமைதி எய்தும்.
    - *இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுக்களைத் தனியே எடுத்து எழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.*
14. அன்னை மொழியே ... எனத்தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடலை எழுதுக

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

IV. இரண்டு வினாக்களுக்கும் விடையளி. 2 x 3 = 6

15. தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக

16. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் - அலகிட்டு வாய்பாடு தருக

V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3 x 4 = 12

17. முல்லைப்பாட்டின் கார்காலச் செய்தியை எழுதுக.

*(அல்லது)*

18. மணிமாறன் என்பவர் நூலக உறுப்பினராக சேர்வதற்கு படிவத்தைப் பூர்த்தி செய்க.

19. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



20. மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2 x 6 = 12

21. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக

*(அல்லது)*

ஆ) *நயம் பாராட்டுக.*

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழும்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்விலுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தர்க் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறும் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

22. அ) குமரிக்கடல் முனையையும் வேங்கடமலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சேர் கன்னியாய் என்று திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணிபாடி, கலம்பகம் உண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப்பூட்டி அழகூட்டி, அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். - இக்கருத்தைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

*(அல்லது)*

ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com